செ.வெ.எண்: 103 நாள்: 16/02/2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 2013, பிப்ரவரித் திங்கள் முழுவதும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு ஆய்வரங்கங்கள், தேசிய/பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியன நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு 01.02.2013 முதல் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன.

அந்த வகையில் இந்நிறுவனத்தால் 14.02.2013 மற்றும் 15.02.2013 ஆகிய நாட்களில் ‘ ‘அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்’ எனும் பொருண்மையில் இரண்டு நாள் பன்னாட்டு/தேசியக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்தியா மட்டுமன்றி அமெரிக்கா, இங்கிலாந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் 60க்கும் மேலான அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். இரண்டு நாள் நிகழ்ந்த இக்கருத்தரங்கின் அனைத்து அமர்வுகளும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணையத்தளத்தில் (www.ulakaththamizh.org) நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

இக்கருத்தரங்கின் நிறைவுவிழா இன்று பிற்பகல் நடைபெற்றது. இவ் விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கு. சிதம்பரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்கள், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைத் தலைவர் (ம) பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் சிறப்புரை வழங்கினர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் முனைவர் பொற்கோ அவர்கள் நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். விழாவின் நிறைவாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் து. ஜானகி அவர்கள் நன்றியுரை கூற நாட்டுப் பண்ணுடன் இவ்விழா இனிதே நிறைவடைந்தது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9